**Petition under Right to Information Act 2005**

Savitha .T
Chennai
New #246 (Old #277B), TTK Road (J.J. Road), Alwarpet,
22.03.19
Chennai - 600 018.

PIO
Superintendent of Police Office,
Krishnagiri, Tamil Nadu 635 115

Dear Sir,
**Sub: Seeking Information under RTI Act 2005**

I am an Indian citizen and I seek the following information under the Right to Information Act 2005. I have affixed the fees of Rs. 10 court fees stamp on this letter. I am also ready to pay any other charges that I am required to pay under the Act for photocopies, CDs, etc. Kindly provide the information sought in soft copy (such as CD/DVD) if possible.

For the years 2013-2014, 2014-2015, 2015-2016, 2016-2017 and 2017-2018, please provide the following information for Krishnagiri district:

1. Road safety budget allocated to the district, amount spent and list of works on which it was spent
2. Dates, start and end time, and venue of DRSC meetings and minutes of the meetings
3. Cost of conducting/ hosting each DRSC meeting
4. Copy of the District Road Safety Action Plan
5. Copy of reports filed to the State Government on the work done by the DRSC

Thanking you,

Savitha .T

அனுப்புதல்

பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக
உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெறுதல்

திருமதி. சவிதா,
புதிய எண் 246 (பழைய எண் 277பி),
TTK ரோடு(J.J.ரோடு)
ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை - 600 018.

ஓ.மு.எண். 10269/2019/சி3 நாள்: 10.06.2019

அய்யா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005 ன் கீழ் தகவல் அளிக்க கோரி மனு - திருமதி. சவிதா - என்பவரின் மனு - தகவல் அளித்தல் - தொடர்பாக.

பார்வை : 1. திருமதி. சவிதா, புதிய எண்.246 (பழைய எண் 277பி), TTK ரோடு(J.J.ரோடு), ஆழ்வார்ப்பேட்டை, சென்னை மாவட்டம் என்பவரின் மனு நாள்: 26.03.2019
2. பொது தகவல் அலுவலர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம்,நாமக்கல் மாவட்டம் ந.க.எண். ஜி4/293/8190/2019 RTI.No. 263/2019 நாள்: 03.05.2019 (இவ்வலுவலகத்தில் கிடைக்க பெற்ற நாள்: 06.05.2019.)

--------

சென்னை மாவட்டம், ஆழ்வார்ப்பேட்டை புதிய எண்.246 (பழைய எண் 277பி), TTK ரோடு(J.J.ரோடு) என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. சவிதா என்பவர் பார்வையில் காணும் மனுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் சில தகவல்கள் வழங்க கோரியுள்ளார். இதன் பேரில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு தகவல்கள் வழங்கப்படுகிறது.

| கேட்கும் தகவல் | தெரிவிக்கப்படும் தகவல் |
|---|---|
| 1. Road safety budget allocated to the district(2013-14,2014-15,2015-16,2016-17,2017-18,2018-19) amount spent and list of works on which it was spent. | கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 2013-14, 2014-15, 2015-16 ஆகிய நிதி ஆண்டுகளில் சாலை பாதுகாப்பு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.<br>2016-17ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.50,00,000/- மற்றும் 2017-18 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.67,62,100/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>அதற்கான போக்குவரத்து ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை இணைக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 4. Number of consumer group/NGO nominations received 2013 to 2019; number of consumer group/ NGO members appointed from 2013-2019 with names, contact details and duration of term of current nominated members | இத்தகவல் ஏதுமில்லை. |
| 5. Duration for which members are appointed and when term of current members will end. | இத்தகவல் ஏதுமில்லை. |
| 6.Details of honorarium / remuneration / reimbursement / facilities provided, if any, for members of the DRSC | இத்தகவல் ஏதுமில்லை. |
| 7. Procedure to select road safety works to be carried out and procedure followed to allocate funds towards these works. | இத்தகவல் ஏதுமில்லை. |

பொதுத் தகவல் அலுவலர்
மற்றும் மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கிருஷ்ணகிரி

10.6.19

அபிமா,
அ.பி.உ
20/4/18

**10.04.2018 அன்று மாலை 04.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் சாலை பாதுகாப்பு தொடர்பான நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**

**ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு. சி.கதிரவன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சியர்,**
**கிருஷ்ணகிரி.**

நாள் : 20.04.2018

ந.க. எண்.1790/2018/சி3

சாலை ~~விபத்து~~ பாதுகாப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 10.04.2018 மாலை 04.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்.

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி
2. மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி
3. சார் ஆட்சியர், ஓசூர்.
4. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை, சேலம்.
5. வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
6. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி.
7. உதவி ஆணையர்(ஆயம்), கிருஷ்ணகிரி.
8. காவல் துணை கண்காணிப்பாளர்கள் கிருஷ்ணகிரி/தேன்கனிக்கோட்டை/பர்கூர்/ஊத்தங்கரை/ஓசூர்.
9. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், கிருஷ்ணகிரி
10. மேலாளர், தேசிய நெடுஞ்சாலை (NHAI), கிருஷ்ணகிரி/சேலம்
11. வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி / போச்சம்பள்ளி /ஓசூர் / ஊத்தங்கரை/ தேன்கனிக்கோட்டை/ பர்கூர்/சூளகிரி
12. வட்டார போக்குவரத்து அலுவலர்கள். ஓசூர்/கிருஷ்ணகிரி
13. நகராட்சி ஆணையர்கள்/கிருஷ்ணகிரி/ஓசூர்
14. கண்காணிப்பாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி
15. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கிருஷ்ணகிரி.

1. ஓசூர் வட்டம், சீதாராம்மேடு பழைய பேருந்து நிலையம் அடுத்துள்ள இரு வளைவுகளில் வாகனங்கள் வேகமாக சென்று திரும்பும் போது எதிர்வரும் வாகனங்களுடன் மோதி விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒன்றும் அதனை தடுக்கும் விதமாக பழைய பேருந்து நிலையத்திலிருந்து ~~Circle~~ வட்ட சாலையில் (Circle Road) வரும்பொழுது இரண்டு குறுகிய திருப்பங்கள் முன்னால் உள்ள சாலையின் இருபுறமும் ~~Shoulders~~ மேடு பள்ளங்களாக பிரிந்து மண்பாதை அமைந்துள்ளது. இதனை சீராக்கி ~~[illegible]~~ விபத்தினை தவிர்க்கலாம் என ஓசூர் வட்டார போக்குவரத்து அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

சமன்படுத்தியும், மற்றும் சாலையை நேர்செய்தும், வேகத்தடை அமைத்தும், பிரதிபலிப்பான்கள் பொருத்தியும், Thermo Plastic Painting Strip அமைத்தும், எச்சரிக்கை பலகை வைத்தும், வாகனத்தின் வேகத்தடையினை கட்டுபடுத்தி பாதுகாப்பாக திரும்ப நெடுஞ்சாலைத்துறை மூலம் அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை,

2 கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், மற்றும் நகரம், ஒசூர் இரயில் நிலையம் முதல் வட்டாட்சியர் அலுவலகம் வழியாக செல்லும் சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலம் நுழையும் இடத்தில் எதிர்வரும் வாகனம் தெரியாத அளவுக்கு குறுகிய திருப்பமாகவும், குறுகிய வழியாகவும், இருப்பதால் எதிர்வரும் வாகனங்கள் தெரியாமல் வேகமாக வந்து திரும்போது விபத்து ஏற்படுகிறது. இரயில் நிலையம் முதல் மேம்பாலம் நுழையும் இடத்தில் பாலத்தின் வெளிப்பகுதியில் எதிர்வரும் வாகனத்தினை கண்டறியும் பொருட்டு சாலையின் இடதுபக்க சுவரை நீக்கி பார்வை பகுதியை அகலப்படுத்தியும், மேம்பாலம் நுழையும் இருபக்கங்களிலும் வாகனத்தின் வேகத்தை குறைக்க வேகதடை மற்றும் எச்சரிக்கை பலகை வைத்து ~~வாகனங்கள் பாதுகாப்பாக~~ திரும்பவும், சாலையை மறைக்கும் சுவரை ~~இடிக்க~~ இடம் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளதா அல்லது பட்டா இடத்தில் கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய சார் ஆட்சியர் ஒசூர், வட்டாட்சியர் ஒசூர், மற்றும் கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை
1. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி
2. சார் ஆட்சியர் ஒசூர்,
3. வட்டாட்சியர் ஒசூர்,

3. கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் வட்டம், சுங்க சாவடியிலிருந்து இராயக்கோட்டை மேம்பாலம் வரை (Centre Median) இரவு நேரங்களில் ~~விளக்கு~~ எரிவதில்லை என்றும் அதற்கு காரணம் போதிய மின்சாரம் கிடைப்பதில்லை என்றும், ~~அதனை சரிசெய்யும் விதமாக~~ சுங்கசாவடிக்கு என்று தனியாக ஒரு Transformer அமைத்து இரவு நேரங்களில் முழுவதும் விளக்கு ~~எறிய~~ செய்து சாலை விபத்து ஏற்படா வண்ணம் இருக்க திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி மற்றும் தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கிருஷ்ணகிரி ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை
1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி ,
2. தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி முதல் இராயக்கோட்டை வரை மாநில நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள கிராமங்களில் மக்கள் நடமாட்டம் மற்றும் பள்ளி அருகில் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுவதை தடுக்க வேகதடை அமைக்க கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை - கிருஷ்ணகிரி,

5. கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி - சேலம் தேசிய நெடுஞ்சாலை மோட்டூர் சந்திப்பு சாலையில் ஏற்படும் விபத்துகளை குறைக்கும் விதமாக (Service Road) வேறு பல பணிகளை துரிதப்படுத்த திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, சேலம் அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, சேலம்.

6. கிருஷ்ணகிரி மாவட்டம், மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் சின்னார் என்ற இடத்தில் உள்ள பாலத்தை அப்புறப்படுத்திட திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி ,

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கிருஷ்ணகிரி

பெறுதல்

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி.
2. சார் ஆட்சியர், ஒசூர்.
3. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி / சேலம்.
4. வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
5. கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி.
6. வட்டாட்சியர், ஒசூர்.
7. செயற் பொறியாளர், த.மி.வாரியம், கிருஷ்ணகிரி.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி
26 APR 2018
அனுப்பப்பட்டது

08.05.2018 அன்று மாலை 03.30 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர், கிருஷ்ணகிரி அவர்கள் தலைமையில் மாவட்ட சாலை பாதுகாப்பு தொடர்பான நடைபெற்ற மாவட்ட சாலை பாதுகாப்பு குழுக்கூட்டம்

**ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள்**

முன்னிலை: திரு. சி.கதிரவன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.

ந.க. எண்.10853/2018/சி3 நாள் :09.05.2018

சாலை பாதுகாப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 08.05.2018 மாலை 03.30 மணியளவில் கிருஷ்ணகிரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் தலைப்புகள் வரும் ஜீலை மாதத்தில் நடைபெறும் பாராளுமன்ற கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் சாலை பாதுகாப்பிற்கு உரிய நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டன.

ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் விவரம்.

1. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி
2. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி
3. மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி
4. சார் ஆட்சியர் (கூ.பொ), ஓசூர்.
5. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி/சேலம்/விழப்புரம்
6. கோட்ட போக்குவரத்து அலவலர், வேலூர்
7. வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
8. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி.
9. உதவி ஆணையர்(ஆயம்), கிருஷ்ணகிரி.
10. முதன்மை கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி
11. காவல் துணை கண்காணிப்பாளர்கள் கிருஷ்ணகிரி/தேன்கனிக்கோட்டை/பர்கூர்/ஊத்தங்கரை
12. மேலாளர், தேசிய நெடுஞ்சாலை (NHAI), கிருஷ்ணகிரி/சேலம்
13. வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி / போச்சம்பள்ளி /ஓசூர் / ஊத்தங்கரை/ தேன்கனிக்கோட்டை/ பர்கூர்/சூளகிரி
14. வட்டார போக்குவரத்து அலுவலர்கள். ஓசூர்/கிருஷ்ணகிரி
15. நகராட்சி ஆணையர், கிருஷ்ணகிரி
16. செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், கிருஷ்ணகிரி
17. தனி வட்டாட்சியர், (தே.நெ) கிருஷ்ணகிரி
18. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கிருஷ்ணகிரி.
19. கூடுதல் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டிடம்), தருமபுரி
20. உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி
21. உதவி இயக்குநரின் நேர்முக உதவியாளர் (சுகாதாரம்), கிருஷ்ணகிரி
22. அரசு சாரா அமைப்பு (NGO) உறுப்பினர், கிருஷ்ணகிரி
23. கண்காணிப்பாளர், உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), கிருஷ்ணகிரி

| | | | | |
|---|---|---|---|---|
| MP has got 7 crore 10 crore to construct service road & bridges | 1. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாலை விபத்துகளின் அதிகமாக நடைபெறு இடங்களை கண்டறிந்து விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டு பாராளுமன்றத்தில் கிருஷ்ணகிரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் கிருஷ்ணகிரி - சேலம் தேசிய நெடுஞ்சாலை மோட்டூர் சந்திப்பில் Service Road , காவேரிப்பட்டிணம் மற்றும் தொண்ணையன்கொட்டாய் ஆகிய இடங்களில் பாலம் கட்டும் பணிக்கு முறையே 7 கோடி மற்றும் 10 கோடி மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு கோரப்பட்டு அந்த நிதியை சாலைபாதுகாப்புக்கு வழங்கப்பட்டது. பணிகளை விரைந்து முடிக்க திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை துறைக்கு அறிவுறுத்தப்பட்டது. | | |
| | | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் (தே.நெ), சேலம். |
| increase the height of bridge construct new one | 2 | கிருஷ்ணகிரி மாவட்டம், சேலம் தேசிய நெடுஞ்சாலை - கே.ஆர்.பி அணை செல்லும் வழியில் அமைந்துள்ள மேம்பாலத்தின் உயரத்தினை அதிகரிக்க அப்பாலத்தினை இடித்து புதிய பாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. | | |
| | | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் (தே.நெ), சேலம். |
| need signals | 3. | கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் சேலம் தேசிய நெடுஞ்சாலை ( Dairy) மேம்பாலத்தின் சந்திப்பில் Automatic Traffic Signal அமைக்க அறிவுறுத்தப்பட்டது. | | |
| | | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி |
| bridge construction stopped for last 3 yrs. need more funds | 4. | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி - திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்க 2012-ல் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரால் வாக்குறுதி அளிக்கப்பட்டு பாராளுமன்றத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் நிதிப்பற்றாக்குறையால் 3 வருட காலமாக பணி நடைபெறாமல் உள்ளது எனவும் அதன் தொடர்பாக திட்ட இயக்குநர்(தே.நெ), சேலம் அவர்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளருடன் 14.05.2018 அன்று சந்தித்து மேற்படி பணிக்கு தேவைப்படும் கூடுதல் நிதி 264 கோடி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆலோசிக்கப்பட்டது. | | |
| | | நடவடிக்கை | 1. | கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை - விழுப்புரம் |
| 5 bridges needed location identified | 5. | கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், தர்கா, ஜீஜீவாடி, சென்னமேடு, பத்தலப்பள்ளி, மற்றும் ESI மருத்துவமனை ஆகிய 5 இடங்களில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு சேர்மேன், தேசிய நெடுஞ்சாலைத் துறை புதுடெல்லிக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அதனை கண்காணித்து நிதி பெற்று மேம்பாலங்கள் அமைக்கும் பணியை தொடங்க அறிவுறுத்தப்பட்டது. | | |
| | | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஷ்ணகிரி மாவட்டம் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள அதிக விபத்துகள் ஏற்படும் இடங்களில் High mass light அமைக்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. 1.தண்டேகுப்பம் சந்திப்பு 2.ஆவின் டய்ரி சந்திப்பு. 3.மோட்டூர் சந்திப்பு. 4.காட்டு வீர ஆஞ்சநேயர் கோயில் சந்திப்பு. 5.ராயக்கோட்டை சந்திப்பு. 6.மேல் சோமார் பேட்டை சந்திப்பு 7.ஆல்ப்ஸ் ஓட்டல் சந்திப்பு. 8. கந்திக்குப்பம் 9.குருபரப்பள்ளி போலிஸ் ஸ்டேசன் எதிரில் 10.சிக்காரி மேடு சந்திப்பு. 11.மேலுமலை 12.திம்மாபுரம் சந்திப்பு. 13.ஜகதாப் சந்திப்பு போன்ற 13 இடங்களில் High mass light அமைக்கும் பணிக்கு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. | | | High mast lost light 13 locations are identified |
| | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி , | |
| 7. | கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புலியரசி கிராமத்தில் உள்ள மதுபானக்கடையினை அகற்ற உதவி ஆணையர் (ஆயம்) அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | | | remove liquor shops |
| | நடவடிக்கை | 1. | உதவி ஆணையர் (ஆயம்) , கிருஷ்ணகிரி , | |
| 8. | கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பர்கூர் பழைய மேம்பாலம் வழியாக திரும்பி செல்ல இயலாததால் Service Road-ஐ நில எடுப்பு செய்து பட்டாதாரர்களுக்கு அவார்டு (நிதி) வழங்க மாவட்ட வருவாய் அலுவலர் (தே.நெ), கிருஷ்ணகிரி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | | | expand service roads |
| | நடவடிக்கை | | மாவட்ட வருவாய் அலுவலர்(தே.நெ), கிருஷ்ணகிரி. | |
| 9. | கிருஷ்ணகிரி மாவட்டம் தேசிய நெடுஞ்சாலைகளில் மொத்தம் எத்தனை CCTV Camara உள்ளது அதில் எத்தனை இயங்குகிறது, எத்தனை பழுது அடைந்துள்ளது என்பதை கண்டறிந்து உடன் சீர்செய்து பொருத்துமாறு திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை அறிவுறுத்தப்பட்டது. | | | Find out the no. of CCTV camera that are not functioning |
| | நடவடிக்கை | 1.<br>2. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி<br>சுங்க சாவடி மேலாளர், கிருஷ்ணகிரி | |
| 10. | கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை மேலுமலை, சின்னாறு போன்ற இடங்களில் Speed Radar Gun அமைத்து வாகனத்தின் வேகம் மற்றும் வாகனத்தின் எண் ஆகியவை கண்டறியும் விதமாக கட்டுப்பாட்டு அறை (Control Room) அமைத்து சுங்கச் சாவடியில் அதிவேக பயணம் செய்யும் வாகன உரிமையாளர்கள் மீது அபராதத் தொகையினை விதிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. | | | Control speed using SR gun |
| | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி | |
| 11. | கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை கிருஷ்ணகிரி வட்டம் குருபரப்பள்ளி என்ற கிராமத்தில் அரசு பள்ளியில் பயிலும் 700 மாணவமாணவியர்கள் தினசரி தேசிய நெடுஞ்சாலையை கடந்து செல்வதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனை தவிர்க்க அவ்விடத்தில் நடைபாதை மேம்பாலம் அமைக்கவும் போக்குவரத்து அலுவலர், காவல் துறை ஆகியோர் இடம் தேர்வு செய்து பேருந்து நிறுத்தம் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டது. | | | need foot over bridge for 700 govt school children crossing the NH |
| | நடவடிக்கை | 1. | மண்டல மேலாளர், போக்குவரத்துத்துறை, கிருஷ்ணகிரி | |

| | | | |
|---|---|---|---|
| 12. | சென்னை - சேலம் தேசிய நெடுஞ்சாலை TCR மருத்துவமனை அருகே மேம்பாலத்தில் விதிமுறைகளை பின்பற்றாமல் வாகன ஓட்டிகள் செல்வதால் Auto Signal அமைத்து முறைப்படுத்திட அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | 1. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
| 13. | ஒசூர் - தளி இரயில்வே கேட் அருகில் வேகத்தடை அமைக்க கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைக்கு அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | 1. | கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி. |
| 14. | கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி L&T நிருவாகம் தேசிய நெடுஞ்சாலையில் மின்விளக்குகள் எரிவதற்கு மின்சார பற்றாகுறை உள்ளதால் சுங்கசாவடி அருகில் புதிய Transform மின்சார வாரியத்தின் உதவியுடன் அமைக்கவும் அதன் செலவை மின்சார கட்டணத்தில் ஈடு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | 1<br>2 | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி<br>மேலாளர், சுங்கச்சாவடி, கிருஷ்ணகிரி |
| 15. | கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை கிருஷ்ணகிரி வட்டம் போலுபள்ளி என்ற கிராமத்தில் அரசு பள்ளி விடுதியில் தங்கி பயிலும் 200 மாணவ மாணவியர்கள் தினசரி தேசிய நெடுஞ்சாலையை கடந்து செல்வதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு அவ்விடத்தில் நடைபாதை மேம்பாலம் அமைக்க தேசிய நெடுஞ்சாலை துறைக்கு அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
| 16. | கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் அருகில் நாட்ராம்கொட்டாய் என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ள லாரி நிறுத்தத்தை விரிவுபடுத்த கால்வாய் அருகில் 100/100 தேவைப்படுப்படுவதால் குடிநீர் வடிகால் வாரியம் 3 நாட்களுக்குள் இடம் அளிக்குமாறும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) தணிக்கை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | | 1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), கிருஷ்ணகிரி.<br>2.செயற்பொறியாளர் (பொ.ப.து), நீர்வள ஆதார அமைப்பு,தருமபுரி. |
| 17. | கிருஷ்ணகிரி மாவட்டம் தேசிய நெடுஞ்சாலையில் மோட்டூர் சந்திப்பு என்ற இடத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்ட பழைய குடிநீர் இணைப்புக் குழாய்களை மாற்றி புதிய குடிநீர் இணைப்புக் குழாய் அமைத்திட கிருஷ்ணகிரி நகராட்சி தேசிய நெடுஞ்சாலை துறையுடன் இணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | 1.<br>2. | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி<br>நகராட்சி ஆணையர், கிருஷ்ணகிரி |

need autom. signals

Speed breaker

new transformer required near toll booths

need foot-over bridge for school

need bigger space to park lorries along highway

need new water pipe lines

...ணகிரி மாவட்டம் குமுதேபள்ளி குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 4 இலட்ச ரூபாயை ஒசூர் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் எனவும் இத்திட்டத்தினை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலான கூட்டத்திற்கு கலந்து கொள்ளாதன் காரணமாக நகராட்சி ஆணையர் ஒசூர், அவர்களுக்கு குற்றக்குறிப்பாணை ஏற்படுத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

| நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
|---|---|---|

19. கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் புலியரசி, சென்னத்தூர், ஒசூர்-காவேரிப்பட்டிணம் ஆகிய இடங்களில் விபத்துக் காலங்களில் அவசர சிகிச்சைக்காக முதலுதவி செய்யும் வகையில் அவசர சிகிச்சை முகாம் ஏற்படுத்திட சுகாதாரத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

(Set up road accident emergency wards in hospitals)

| நடவடிக்கை | | உதவி இயக்குநர், சுகாதாரம் - கிருஷ்ணகிரி |
|---|---|---|

20. தேசிய நெடுஞ்சாலையின் சர்வீஸ் சாலையில் சரக்கு பேருந்துகள் பல இடங்களில் நிறுத்தப்படுகிறது. குறிப்பாக ஒசூர் வட்டம் சீதாராம் மேடு என்ற இடத்தில் சர்வீஸ் சாலையில் லாரிகள் அதிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன. அதனை தடுக்க சர்வீஸ் சாலையில் No Parking Area- என குறிப்பிட்டு மார்க் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. No Parking Board அமைக்குமாறும் விதியை மீறி வாகனங்கள் நிறுத்துபவர்களிடம் ரூ.500 வீதம் அபராதம் விதிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் காவல் துறைக்கு அறிவுறுத்தப்பட்டது

(Stop parking along service lanes. Set up penalty of Rs 500 boards.)

| நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
|---|---|---|

21. கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை சீதாராம்மேடு என்ற இடத்தில் சர்வீஸ் சாலைகளில் வேகத்தடை அமைத்திட அறிவுறுத்தப்பட்டது.

(Speed breaker)

| நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
|---|---|---|

22. கிருஷ்ணகிரி - ராயக்கோட்டை மேம்பாலத்தில் உள்ள Signal உபயோகத்தில் இருத்திடவும் மேம்பாலத்தின் ஒசூர் செல்லும் வளைவுப்பகுதியில் வாகனங்களை நிறுத்தும் ஷேர் ஆட்டோக்களால் நெரிசல் மற்றும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கிருஷ்ணகிரி வட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பகுதியில் ஷேர் ஆட்டோக்கள் நிறுத்தம் செய்யும் உரிமையாளரின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

(Stop share auto parking on road bridge)

| நடவடிக்கை | | வட்டார போக்குவரத்து அலுவலர் - கிருஷ்ணகிரி |
|---|---|---|

24. கிருஷ்ணகிரி - ராயக்கோட்டை மேம்பாலத்தின் ஒசூர் செல்லும் சர்வீஸ் சாலையினை விரிவுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது.

(Expand the road size of service roads.)

| நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 25. | கிருஷ்ணகிரி - காவேரிப்பட்டிணத்திற்கு செல்லும் பாதையினை (சேலம் மேம்பாலம் அருகில்) ஒருவழிச் சாலையாக மாற்றிடவும், அவ்விடத்தில் Bari guard, No Entry Board அமைத்திடவும் பொதுமக்கள் அறியும் வகையில் செய்திதாள் விளம்பரம் செய்தும் மற்றும் அந்த இடத்தில் விளம்பர பலகை வைக்கவும் அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |
| 26. | கிருஷ்ணகிரி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஒரப்பம், கந்திகுப்பம், தண்டேகுப்பம் ஆகிய 3 இடங்களில் (Centre Median) உள்ள மின் விளக்குகளுக்கு மின்சாரம் போதிய அளவு இல்லாததால் விளக்குகள் எரிவதில்லை. எனவே தனியாக ஒரு transform அமைத்திடவும் அதற்கான தொகையினை தேசிய நெடுஞ்சாலைத்துறையே ஏற்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | | 1. செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கிருஷ்ணகிரி<br>2. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி |
| 27. | கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் பேருந்து நிலையத்தின் சாலையினை விரிவுபடுத்திட தேசிய நெடுஞ்சாலை துறைக்கு அறிவுறுத்தப்பட்டது. | | |
| | நடவடிக்கை | | திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி |

need road sign boards that are way entry.

need transformer to power street lights.

Expand the Hosur busstand road

(ஒ/ம)

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கிருஷ்ணகிரி

பெறுதல்,

1.மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி.
2.திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி / சேலம்/விழுப்புரம்
3.மாவட்ட வருவாய் அலுவலர்(தே.நெ), கிருஷ்ணகிரி.
4.மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), கிருஷ்ணகிரி.
5.உதவி இயக்குநர், சுகாதாரம் - கிருஷ்ணகிரி
6.கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி.
7.செயற்பொறியாளர் (பொ.ப.து), நீர்ப்பாசனம், தருமபுரி.
8.தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கிருஷ்ணகிரி
9.மண்டல மேலாளர், போக்குவரத்துத்துறை, கிருஷ்ணகிரி
10.சுங்க சாவடி மேலாளர், கிருஷ்ணகிரி
11.உதவி இயக்குநர் (ஆயம்) , கிருஷ்ணகிரி,
12.~~மாவட்ட வருவாய் அலுவலர்(தே.நெ), கிருஷ்ணகிரி.~~

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி
15 MAY 2018
அனுப்பப்பட்டது

Scanned by CamScanner

# 10.07.2018 அன்று மாலை 04.30 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் சாலை பாதுகாப்பு தொடர்பான நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

## ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. சி.கதிரவன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

ந.க. எண்.10853/2018/சி3 நாள் : .07.2018

சாலை பாதுகாப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 10.07.2018 அன்று மாலை 04.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்கண்ட அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்.

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி
2. மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி
3. வருவாய் கோட்டாட்சியர், ஓசூர்.
4. வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
5. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி.
6. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி
7. உதவி ஆணையர் (ஆயம்), கிருஷ்ணகிரி.
8. காவல் துணை கண்காணிப்பாளர்கள் கிருஷ்ணகிரி/தேன்கனிக்கோட்டை/பர்கூர்/ஊத்தங்கரை/ஓசூர்.
9. வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி / போச்சம்பள்ளி /ஓசூர் / ஊத்தங்கரை/ பர்கூர்/சூளகிரி
10. வட்டார போக்குவரத்து அலுவலர்கள். ஓசூர்/கிருஷ்ணகிரி
11. நகராட்சி ஆணையர்கள்/கிருஷ்ணகிரி/ஓசூர்
12. கண்காணிப்பாளர், நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி
13. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கிருஷ்ணகிரி.
14. மேலாளர், சுங்கசாவடி (L&T), கிருஷ்ணகிரி/சேலம்

1. கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனை எதிரில் வேகதடை அமைக்க வேண்டும் என இணை இயக்குநர் (மருத்துவம்) ——ஆல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி இடத்தில் உடனடியாக வேகத்தடை அமைக்க கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலைத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. கோட்டபொறியாளர்,நெடுஞ்சாலைத்துறை, கிருஷ்ணகிரி

லமையில் ...ட்டம்

2 ஒசூர் வட்டம், பாகலூர் சாலை - கிருஷ்ணகிரி (Service Road) சேவை சாலையி... புறமும் மற்றும் ஒசூர் இரயில் நிலையம் இடது புறமும் அமைந்துள்ள Bus Stop she... பயன்படுத்தப்படாமல் தேவையற்ற சில பொருட்கள் வைத்து அடைக்கப்பட்டதாகவும் ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி Bus Stop shelter –ஐ பயன்பாட்டிற்கு கொண்டு வர நகராட்சி ஆணையர், ஒசூருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. நகராட்சி ஆணையர், ஒசூர்.

3. ஒசூர் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை சீதாராம்மேடு அருகில் இரு புறமும் அமைந்துள்ள (Service Road) ரிங்ரோடு ஆகியவை இணையும் பகுதியில் Speed Breaker அமைக்க ஏற்கனவே சாலைப்பாதுகாப்பு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு நாளதுவரை செயல்படுத்தப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே உடனடியாக வேகதடை அமைக்க திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி ,

4. கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டிணம் பையூர் பஞ்சாயத்து, பொம்மசந்திரம் கிராமத்தை ஒட்டி NH-44 தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிறுத்ததில் உள்ள கூட்டு ரோட்டில் உயர் கோபுர மின் விளக்கு (High Mast Light) இல்லாததால் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுவதாக திரு.கிருஷ்ணன் த/பெ.வெங்கடேசகவுண்டர் என்பவர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்துள்ளார். (High Mast Light) அமைக்க திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி ,

5. கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள மேம்பாலம் மற்றும் சந்திப்பு சாலைகளில் LED Multi Color Blinker Light அமைக்க திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி மற்றும் சேலம் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி மற்றும் சேலம்.

18.09 கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை கிருஷ்ணகிரி சுங்கசாவடியிலிருந்து ராயக்கோட்டை மேம்பாலம் வரை உள்ள மின்விளக்குகள் இரவு நேரங்களில் எரிவதில்லை குறிப்பாக D.K.Samy School, Krishnagiri அருகில், ஒசூர் சீதாராம் மேடு, மற்றும் தர்கா பகுதி ஆகிய இடங்களில் இரவு நேரங்களில; High Mass விளக்குகள் எரிவதில்லை என்றும் அந்த இடங்களல் வாகனங்கள் வருவது தெரியவில்லை என்பதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனவே மேலே தெரிவிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக High Mass விளக்குகள் எரிய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிருஷ்ணகிரி சுங்கசாவடி (L&T), மேலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. மேலாளர், சுங்கசாவடி (L&T), கிருஷ்ணகிரி.
2. திட்ட இயக்குநர் தேசிய நெடுஞ்சாலை -கிருஷ்ணகிரி ,

7 கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலை ஒசூர் தர்கா சந்திப்பில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க நகர போக்குவரத்துகளை மாற்றம் செய்யப்படடு Centre Median ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி தர்கா சந்திப்பில் பள்ளி மாணவர்கள் Centre Median மீது ஏறி கடந்து செல்வதாகவும் இதனால் சாலை விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் இது குறித்து வருவாய் கோட்ட அலுவலர், ஒசூர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஒசூர் ஆகியோர் கூட்டாக சேர்ந்து உள்ளுர் அமைப்புகளை (Local Association) அழைத்து பேசி அந்த இடத்தில் பள்ளி மாணவர்கள் சாலையை கடக்காமல் Centre Median உயரத்தை அதிகப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை கிருஷ்ணகிரி ,
2. வருவாய் கோட்ட அலுவலர், ஒசூர்
3. காவல் துணை கண்காணிப்பாளர், ஒசூர்

8 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலை மாநில நெடுஞ்சாலை போக்குவரத்து நெரிசல் மற்றும் மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் இரவு நேரங்களில் High Mass Light மற்றும் மின் விளக்குகள் எரிகிறதா என்பதை ரோந்து சென்று மாவட்ட ஆட்சியருக்கு whats app மூலம் தகவல் தெரிவிக்க அனைத்து காவல் துணை கண்காணிப்பாளருக்கும் அறிவுறுத்தப்பட்டது.

நடவடிக்கை 1. காவல் துணை கண்காணிப்பாளர்கள்,
கிருஷ்ணகிரி/பர்கூர்/ஒசூர்/ஊத்தங்கரை/தேன்கனிக்கோட்டை

(அ/ந)
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கிருஷ்ணகிரி

பெறுதல்

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி.
2. வருவாய் கோட்டாட்சியர், ஒசூர்.
3. திட்ட இயக்குநர், தேசிய நெடுஞ்சாலை - கிருஷ்ணகிரி / சேலம்.
4, கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி.
6. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள்,
கிருஷ்ணகிரி/பர்கூர்/ஒசூர்/ஊத்தங்கரை/தேன்கனிக்கோட்டை
7. மாவட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கிருஷ்ணகிரி
8. மேலாளர், சுங்கசாவடி (L&T), கிருஷ்ணகிரி.

18 JUL 2018
அனுப்பப்பட்டது

